# மாணவர்களின் உரிமைக்காகக்

# குரல் கொடுத்த

# உத்தமன்

# விஜி எங்கே?

யாழ். பல்கலைக்கழகத்திலே மூன்றாம் வருட வர்த்தகத் துறையில் கல்வி பயின்று கொண்டிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த அருணகிரிநாதன் விஜிதரன் அவர்கள் கடந்த 04-11-86 அன்று இரவு இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டது யாவரும் அறிந்த ஒன்றாகும். இதற்காகப் பல்கலைக்கழக மாணவர்கள் மறியல் போராட்டங்கள், ஊர்வலங்கள், கட்டம் கட்டமான உண்ணாவிரதத்தினை மேற்கொண்டு, இறுதியில் 19-11-86 முதல் இறுதிக்கட்டப் போராட்ட வடிவமான சாகும் வரை உண்ணாவிரதத்தினை மேற்கொண்டுள்ளார்கள். இதற்கு எமது பூரண ஆதரவினை வழங்குகின்றோம்.

பல்கலைக்கழக மாணவர்களின் ஜனநாயக உரிமைக்காகப் போராடிய விஜிதரன் எங்கே? இயக்கங்களே பதில் சொல்லுங்கள் தான் மட்டும் முன்னேறிக் கொண்டு செல்ல வேண்டும் என்ற சுயநலம் அவனிடம் ஒருபோதும் இருக்கவில்லை. மாணவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட இடமெல்லாம் விஜியின் குரல்கள் ஒலித்துக் கொண்டே இருந்தன. ஆகையினால் தான் இன்று யாழ்நகர் முழுவதும் "விஜி" என்ற ஒலிகள் கேட்கின்றது.

தமிழீழ மக்களே இத்தகைய அராஜகச் செயலினை இன்னும் தமிழீழ மண்ணில் நடைபெறுவதற்கு அனுமதிக்கின்றீர்களா? புனிதமான விடுதலை இயக்கங்களே! மிக விரைவில் விஜியைத் தேடிக் கண்டு பிடித்து ஒப்படையுங்கள்.

பனை வாழ் மக்களாகிய நாம் அனைவரும் இப் போராட்டத்தில் கலந்து கொண்டு எங்களது பூரண ஆதரவினை வழங்குகின்றோம்.

இங்ஙனம்

பளை வாழ் பொது மக்களும்

பச்சிலைப்பள்ளி யாழ். பல்கலைக்கழக மாணவர்களும்

வேல் அழகன் பதிப்பகம், கண்டி றோட், பளை.